**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** | INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109779

1. District மாவட்டம்: Kanchipuram  PS: காவல்நிலையம்: Vigilance & Anti Corruption  Year: ஆண்டு  FIR No.: மு.த.அ. எண்: 01/AC/2024/KM  Date: நாள்: 10.01.2024 at 16.30 hrs.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 (as amended in 2018)  Sections பிரிவுகள்: U/S 7

   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 05.01.2024  Date to : நாள் வரை at 14.45 hrs.

   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.01.2024  Time : நேரம் at 15.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.01.2024  Time : நேரம் at 15.00 hrs & 16.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North-East-About 60 km

   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி Kunrathur Municipal Office. Kanchipuram Dist.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

Seen [signature] 11/01/24

Seen [signature] 11/01/24

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. S. Munusamy  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Subramaniyan

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு age, 66  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில்  (g) Address : முகவரி Door No. 4, Plot No. 84, 5th Cross Street Rajeev Nagar, perungudi chennai-96

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Balasubramaniyan, Town planing Inspector, Kunrathur Municipality. Kanchipuram. District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded Rs 24,000/- as bribe.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Nil.

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — Nil —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணிந்து அனுப்பப்படுகிறது

இன்று 10.01.2024 ந்தேதி மாலை சுமார் 15.00 மணியளவில் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளராகிய நான் அலுவலில் இருந்த போது. சென்னை பெருங்குடி, ராஜீவ் நகர், 5-வது குறுக்கு தெரு, கதவு எண் 4, பிளாட் எண் 84 என்ற முகவரியில் வசிக்கும் திரு. சுப்பிரமணியன் என்பவரின் மகன் திரு. வைசாமி என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகார் விபரம் பின்வருமாறு.... (இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது).

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G. Annadurai Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Kanchipuram on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10/1/2024 | 10/01/2024
---|---
14. Signature / Thumb Impression of the Complainant / Informant<br>குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /<br>பெருவிரல் இரேகைப் பதிவு | Signature of the Officer in-charge, Police Station<br>காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
11.01.2024 at 09.15 hrs.

Name: பெயர் G. ANNADURAI
Rank: நிலை Inspector of Police No. எண் .........
Vigilance & Anti-Corruption
Kanchipuram.

**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** | **INTEGRATED INVESTIGATION FORM-I**

(Under Section 154 Cr.P.C)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 12513108

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.01/AC/2024/KM, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

அனுப்புநர், திரு.S.முனுசாமி, வயது-66, த/பெ. சுப்பிரமணியன், கதவு எண்.4, மனை எண்.84, 5-வது குறுக்கு தெரு, ராஜீவ் நகர், பெருங்குடி, சென்னை-96 பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, காஞ்சிபுரம். ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் தலைமையாசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றேன். நான் கடந்த 2000-ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் தாலுக்கா, மூன்றாம் கட்டளை கிராமத்தில் சர்வே எண்.67/2A1B-ல் அமைந்துள்ள ஸ்ரீ திருப்பதி நகர் என்ற மனைப்பிரிவில் மனை எண்.83-ல் உள்ள 2400 சதுர அடி கொண்ட மனையினை கிரையமாக பெற்றேன். என்னைப்போலவே எனது உறவினர்கள் திரு.M.மாதவன் என்பவர் மனை எண்.67-ல் உள்ள 1200 சதுரடி கொண்ட மனையினையும் மற்றும் திரு.T.வேதாநந்தன் என்பவர் மனை எண்.33-ல் உள்ள 1800 சதுரடி கொண்ட மனையினையும் கிரையமாக பெற்றனர். பின்னர் கடந்த 13.10.2023-ந்தேதி அன்று மேற்படி மூவருக்குமான விண்ணபத்தினை ஆன்லைன் மூலம் பதிவு செய்து அதனுடன் தகுந்த இணைப்புகளை சேர்த்து, மனை வரன்முறைபடுத்த வேண்டி குன்றத்தூர் நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பித்தோம். மேற்படி 3 மனுக்களுக்கும், வரன்முறைபடுத்துவதற்காக அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணங்கள் அனைத்தும் செலுத்திவிட்டோம். அந்த 3 மனுக்களின் தொடர் நடவடிக்கைகளையும் நானும் எனது சகலை திரு.T.வேதாநந்தன் அவர்களும் கவனித்து வந்தோம். அதன்படி நான் பலமுறை குன்றத்தூர் நகராட்சி அலுவலகம் சென்று சம்மந்தப்பட்ட உதவியாளர் திருமதி.வின்னரசி என்பவரை சந்தித்து மேற்படி 3 மனுக்களின் நிலை குறித்து கேட்டு வந்தேன். பின்னர் 30.12.2023-ந்தேதி காலை சுமார் 11.00 மணியளவில் குன்றத்தூர் நகராட்சி அலுவலகம் சென்று உதவியாளர் திருமதி.வின்னரசி அவர்களை சந்தித்து எங்களது 3 மனக்கள் குறித்து கேட்டபோது, அவர் “அலுவலகத்தில் சில பார்மாலிட்டீஸ் இருக்கு” என்றும் இது சம்மந்தமாக ஆணையர் திருமதி.குமாரி அவர்களை சந்தித்து கேட்குமாறு என்னிடம் தெரிவித்தார். அதன்படி நான் உடனடியாக அலுவலகத்திலிருந்த ஆணையர் திருமதி.குமாரி அவர்களை சந்தித்து எங்களது மனுக்கள் குறித்து கேட்டபோது, அவர் உதவியாளர் திருமதி.வின்னரசி அவர்களை அழைத்து

**(FIR contents, continues to next page.....)**

240-1(Type-1) 10,45,700+3 Cps--21-04-2021--(HP-32)

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.01/AC/2024/KM, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

எங்களின் 3 மனுக்களின் கோப்புகளை தயார் செய்து, தன்னிடம் கொண்டுவந்து கொடுக்குமாறு தெரிவித்தார், அதன்பின்னர் திருமதி.வின்னரசி என்னை அழைத்து வருடத்தின் கடைசி நாள் என்பதால் கணினியில் முக்கிய பணிகளை அவசரமாக முடிக்கவேண்டியுள்ளதால், என்னை அடுத்த வாரம் வந்து சந்திக்குமாறு தெரிவித்து அனுப்பிவிட்டார், அதன்பின்னர் எனது சகலை திரு.T.வேதாநந்தன் அவர்களை குன்றத்தூர் நகராட்சி அலுவலகம் சென்று ஆணைகளை பெற்றுவரும்படி நான் தெரிவித்தேன், அதன் பின்னர் கடந்த 04.01.2024-ந்தேதி சுமார் 11.30 மணியளவில் குன்றத்தூர் நகராட்சி அலுவலகம் சென்று உதவியாளர் திருமதி.வின்னரசி அவர்களை சந்தித்து 3 மனுக்கள் குறித்து கேட்டபோது, உதவியாளர் மேற்படி மனுக்கள் தொடர்பாக அலுவலகத்தில் சில பார்மாலிட்டீஸ் இருக்கு, ஏற்கனவே வந்திருந்த உங்களது அண்ணனை வந்து பார்க்க சொல்லுங்கள் என்று தெரிவித்து திருப்பி அனுப்பிவிட்டார், மேற்படி தகவலை அவர் என்னிடம் தெரிவித்ததின்பேரில் நான் கடந்த 05.01.2024-ந்தேதி மதியம் சுமார் 02.45 மணியளவில் குன்றத்தூர் நகராட்சி அலுவலகம் சென்று உதவியாளர் திருமதி.வின்னரசி அவர்களை சந்தித்தபோது, அவர் என்னை நகரமைப்பு ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியன் என்பவரிடம் அழைத்துச்சென்று, எங்களது மனுக்கள் குறித்து தெரிவித்தார், அப்போது நகரமைப்பு ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியன் அவர்கள் என்னிடம் ஒரு மனுவிற்கு ரூ.12,000/- என மொத்தம் ரூ.36,000/- கொடுக்கவேண்டும் என்று தெரிவித்தார், அதற்கு அவ்வளவு பணம் எங்களால் கொடுக்க இயலாது என்று தெரிவித்ததன் பேரில், மனு ஒன்றுக்கு ரூ.8,000/- வீதம் மூன்று மனுக்களுக்கும் சேர்த்து ரூ.24,000/-ஐ கொடுக்கவேண்டும் என்றும் அப்பணத்தை அடுத்த வாரத்திற்குள் கொண்டுவந்து கொடுத்தால்தான் 3 மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொண்டு மனை வரன்முறைப்படுத்தி ஆணையர் அவர்களிடம் கையொப்பம் பெற்று தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார், அதன்பின்னர் நான் மேற்படி தகவலை எனது உறவினர்கள் திரு.M.மாதவன் மற்றும் திரு.T.வேதாநந்தன் ஆகியோர்களிடம் தெரிவித்து ஆலோசனை செய்தேன், எங்கள் மூன்று பேருக்கும் நகரமைப்பு ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியன் கேட்ட லஞ்சப்பணம் கொடுத்து, மனை வரன்முறைபடுத்துதல் ஆணையை பெற விருப்பம் இல்லாததால், லஞ்ச ஒழிப்பு துறையில் அவர்மீது புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்தோம், அதன்படி நான் நகரமைப்பு ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியன் கேட்ட லஞ்சப்பணம் ரூ.24,000/-த்துடன், இன்று 10.01.2024-ந்தேதி மாலை

**(FIR contents, continues to next page.....)**

**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
**(Under Section 154 Cr.P.C)**
**(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)**

**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

C 12513109

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.01/AC/2024/KM, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues.....)**

சுமார் 03.00 மணியளவில் காஞ்சிபுரம் விஜிலன்ஸ் அலுவலகத்திற்கு வந்து என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட குன்றத்தூர் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரியும் திரு.பாலசுப்பிரமணியன் என்பவர் மீது சட்ட நடிவடிக்கை மேற்கொள்ள இப்புகார் மனுவினை தங்களிடம் கொடுக்கிறேன். மேலும் தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுப்பனே் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு, SdXXX S.Munusamy, 10.01.2024.

**Honoured Madam,**

I received the above complaint on 10.01.2024 at 15.00 hrs, after verifying the antecendents of the accused and credibility of the complainant. After obtaining permission from the DVAC, Chennai, I have registered a case in Kanchipuram V&AC, Cr.No.1/AC/2024/KM, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) on 10.01.2024 at 16.30 hrs. The original FIR along with complaint sent to the Hon'ble CJM cum Special Judge, Chengalpet. Copies send to the Officers concerned and took-up the investigation.

G.A. [signature] 10/01/2024
(G.ANNADURAI)
Inspector of Police
Vigilance and Anti-Corruption
Kanchipuram-631501.